**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 221/மா/2024**

**நாள்: 19.06.2025**

| | | |
|---|---|---|
| திருவாளர்கள் (1) S. திருமூர்த்தி மற்றும்<br>(2) V. சரவணக்குமார்<br>கோயம்புத்தூர் | --- | முறையீட்டு மனுதாரர்கள் |
| (1) உதவி ஆணையாளர்,<br>வடக்கு மண்டலம்,<br>கோயம்புத்தூர் மாநகராட்சி<br>(2) திரு. V. ரங்கசாமி,<br>துடியலூர், கோயம்புத்தூர். | --- | எதிர்மனுதாரர்கள் |

கோயம்புத்தூர் மாவட்டம், பொகலூர், சின்ன வடவள்ளி (PO), பெரிய வடவள்ளி, எண் 6/46 என்கிற முகவரியில் வசிக்கும் திருவாளர்கள் S.திருமூர்த்தி மற்றும் V.சரவணக்குமார் ஆகியோரின் 30.10.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 04.11.2024 அன்று பெறப்பட்டு 221/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

கோயம்புத்தூர் மாவட்டம், பொகலூர், சின்ன வடவள்ளி (PO), பெரிய வடவள்ளி, எண் 6/46 என்கிற முகவரியில் வசிக்கும் திருவாளர்கள் S. திருமூர்த்தி மற்றும் V. சரவணக்குமார் ஆகியோர் தங்களது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்கள்:-

> “12.08.2024 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் புகார் மனுவில் கோயமுத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட M.T.P. Road, 9/2B5 V.ரங்கசாமி என்பவர் அனுமதிக்கு மாறாகவும் கூடுதலாகவும் கட்டிடம் கட்டியுள்ளார். இதற்கு குறைந்தளவே சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டு கொண்டிருக்கிறது. 2 (இரண்டு) மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை கமிஷனர் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. சம்பந்தப்பட்ட கட்டிட உரிமையாளரிடம் சுயலாபம் அடைந்து விட்டாரா என்று ஐயம் எழுகிறது. ஆகவே, தாங்கள் உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.
>
> குறிப்பு: இக்கட்டிடத்தின் பின்புறம் அனுமதி பெறாமல் கம்யூனிட்டி Hall இயங்கி கொண்டிருக்கிறது.” என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 27.11.2024 நாளிட்ட அறிவிக்கை மூலம் கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம் உதவி ஆணையாளரிடம் கோரப்பட்டது.

3. தொடர்ந்து, இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களான கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் உதவி ஆணையர் மற்றும் கோயம்புத்தூர், துடியலூரைச் சேர்ந்த திரு.V. ரங்கசாமி ஆகியோரை கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக விருந்தினர் மாளிகையில் 05.05.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 28.04.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மேற்படி விசாரணைக்கு முன்னதாக கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், உதவி ஆணையாளர் தனது 02.05.2025 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"திரு.V.சரவணகுமார், திரு.S.திருமூர்த்தி ஆகியோர் கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 01, கதவு எண் 9, 2B-5 மேட்டுப்பாளையம் ரோட்டில் இயங்கி வரும் அன்னபூர்ணா ஹோட்டல் வரிவிதிப்பு எண் 162/001/901410 திரு. ரங்கசாமி பெயரில் உள்ளதாகவும், மேற்படி கட்டிடம் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளதாகவும் கட்டிடத்திற்கு வரி குறைவாக விதிக்கப்பட்டுள்ளதாகவும் புகார் மனு சமர்ப்பித்துள்ளனர்.

மேற்படி புகார் மனு மீது வார்டு எண் 01 வரிவசூலர் மற்றும் வடக்கு மண்டல உதவி வருவாய் அலுவலர் ஆகியோர் 16.12.2024-ம் தேதியன்று தலப்பார்வை செய்து சம்பந்தப்பட்ட கட்டிடத்தை அளவை செய்ததில் ஏற்கனவே அனுமதி பெற்று கட்டப்பட்டுள்ள 12,470 சதுரடியோடு கூடுதலாக 1343 சதுரடி அனுமதியின்றி கூடுதலாக கட்டப்பட்டது, கண்டறியப்பட்டு கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் உதவி ஆணையர் 06.09.2024 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக உரிய அறிவிப்பு வழங்கப்பட்டது. இவ்வறிப்பின் பெயரில் விதிமீறி கூடுதலாக கட்டப்பட்ட 1343 சதுரடிக்கு ரூ.38,310/- (ரூபாய் முப்பத்து எட்டாயிரத்து முன்னூற்று பத்து மட்டும்) 29.01.2025-ம் தேதியன்று வடக்கு மண்டலம் வரிவசூல் மையத்தில் அபராத தொகையாக வசூல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி நிறுவனத்தினர் ஏற்கனவே வரியாக ரூ.61,110/- (ரூபாய் அறுபத்து ஓராயிரத்து நூற்று பத்து மட்டும்) செலுத்தி வந்த நிலையில் தற்போது கூடுதலாக விதிக்கப்பட்ட தொகை உடன் ரூ.22,347/- (ரூபாய் இருபத்து இரண்டாயிரத்து முன்னூற்று நாற்பத்து ஏழு மட்டும்) ஆக கூடுதல் ரூ.83,457/- (ரூபாய் எண்பத்து மூன்றாயிரத்து நானூற்று ஐம்பத்து ஏழு மட்டும்) வரி விதிக்கப்பட்டு வரியினை 2024-2025 வரை 13.03.2025 அன்று வசூல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் கூடுதலாக வரிவிதிக்கப்பட்ட விபரங்கள் வரிவசூல் செய்யப்பட்ட விபரங்களின் நகல்களை இத்துடன் இணைத்துள்ளது என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

5. மனுதாரர்கள் 05.05.2025 அன்று கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக விருந்தினர் மாளிகையில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:

"கோயமுத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட V.ரங்கசாமி கதவு எண்.9/2B5, M.T.P Road, துடியலூர் சுமார் 15000 சதுரடி உள்ள கட்டிடத்திற்கு குறைந்தளவே சொத்து வரி விதித்து வருவாய் இழப்பு ஏற்படுத்தியுள்ளார்கள்.

மேற்படி கட்டிட வரைபடத்தில் உள்ளவாறு கட்டிடம் கட்டப்படவில்லை. பார்க்கிங் பகுதி விடப்படவில்லை. அனுமதியின்றி Community Hall இயங்கி வருகிறது. ஆகவே விதி மீறிய கட்டிடத்தை அகற்றி குறைந்தளவே சொத்துவரி விதித்து வருவாய் இழப்பு

ஏற்படுத்திய அதிகாரிகள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு இம்முறைமன்றத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

6. கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம் உதவி ஆணையாளர் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக விருந்தினர் மாளிகையில் 05.05.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ள கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 1 கதவு எண்.9/2B5 மேட்டுப்பாளையம் ரோட்டில் இயங்கி வரும் அன்னபூர்ணா ஹோட்டல் கட்டிடத்தினை (வரி விதிப்பு எண் 162/001/901410) வரிவசூலர் மற்றும் வடக்கு மண்டல உதவி வருவாய் அலுவலர் ஆகியோர் 16.12.2024–ம் தேதியன்று தலப்பார்வை செய்து சம்பந்தப்பட்ட கட்டிடத்தை அளவை செய்ததில் ஏற்கனவே அனுமதி பெற்று கட்டப்பட்டுள்ள 12,470 சதுரடியோடு கூடுதலாக 1343 சதுரடி அனுமதியின்றி கூடுதலாக கட்டப்பட்டது கண்டறியப்பட்டு உரிய அறிவிப்பு வழங்கப்பட்டது. இவ்வறிப்பின் பெயரில் விதி மீறி கூடுதலாக கட்டப்பட்ட 1343 சதுரடிக்கு ரூ.38,310/–, 29.01.2025–ம் தேதி அன்று அபராத தொகையாக வசூல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி நிறுவனத்தினர் ஏற்கனவே வரியாக ரூ.61,110/– செலுத்தி வந்த நிலையில் தற்போது கூடுதலாக விதிக்கப்பட்ட தொகை உடன் ரூ.22,347/– ஆக கூடுதல் ரூ.83,457/– வரி விதிக்கப்பட்டு வரியினை 2024–2025 வரை, 13.03.2025 அன்று வசூல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரத்தை இம்முறைமன்ற நடுவர் முன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூடுதலாக வரிவிதிக்கப்பட்ட விவரங்கள் வரிவசூல் செய்யப்பட்ட விபரங்களின் நகல்களை இம் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

7. மற்றொரு எதிர்மனுதாரர் திரு.V.ரங்கசாமி என்பவர் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக விருந்தினர் மாளிகையில் 05.05.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

**Car Parking**
Enough car parking being provided as per norms on all sides.

**Building Set back**
All four sides proper and correct set back being provided.

**Property Tax**
The Tax being paid under commercial and in previous year I have paid tax of Rs.1,34,220 and in the current year I am paying revised tax of Rs.2,21,756 as per the dimesion taken by the Corporation officials. There is no any reduction of tax being paid to the Government.

**Approval**
Complete building is being approved and tax paid under commercial purpose.

8. மனுதாரர்களின் புகார் மனு மற்றும் வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரர்கள் (1) கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டல உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் மற்றும் (2) திரு.V.ரங்கசாமி, துடியலூர், கோயம்புத்தூர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்ட விவரங்கள் கண்றியப்பட்டன:

மனுதாரர்கள், கோயமுத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட M.T.P Road, கதவு எண் 9/2B5–ல் V.ரங்கசாமி என்பவர் அனுமதிக்கு மாறாகவும் கூடுதலாகவும் கட்டிடம் கட்டியுள்ளார் எனவும், இதற்கு குறைந்தளவே சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளதால் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது எனவும், மேற்படி கட்டிட வரைபடத்தில் உள்ளவாறு கட்டிடம் கட்டப்படவில்லை எனவும், பார்க்கிங் பகுதி விடப்படவில்லை எனவும், இக்கட்டிடத்தின் பின்புறம் அனுமதி பெறாமல் Community Hall இயங்கி வருகிறது எனவும், இதன் மீது இம்முறைமன்றம் உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்குமாறும், விதி மீறிய கட்டப்பட்ட கட்டிடத்தை அகற்றவும், குறைந்தளவே சொத்துவரி விதித்து வருவாய் இழப்பு ஏற்படுத்திய அதிகாரிகள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும், தங்களுடைய மனு மற்றும் வாக்குமூலத்தில் தெரிவித்திருப்பது அறிய முடிகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 1 கதவு எண்.9/2B5 மேட்டுப்பாளையம் ரோட்டில் இயங்கி வரும் அன்னபூர்ணா ஹோட்டல் கட்டிடத்தினை (வரி விதிப்பு எண் 162/001/901410) வரிவசூலர் மற்றும் வடக்கு மண்டல உதவி வருவாய் அலுவலர் ஆகியோர் 16.12.2024–ம் தேதியன்று தலப்பார்வை செய்து சம்பந்தப்பட்ட கட்டிடத்தை அளவை செய்ததில் ஏற்கனவே அனுமதி பெற்று கட்டப்பட்டுள்ள 12,470 சதுரடியோடு கூடுதலாக 1343 சதுரடி அனுமதியின்றி கூடுதலாக கட்டப்பட்டது கண்டறியப்பட்டு, உரிய அறிவிப்பு வழங்கப்பட்டு, விதி மீறி கூடுதலாக கட்டப்பட்ட 1343 சதுரடிக்கு ரூ.38,310/–, 29.01.2025–ம் தேதி அன்று அபராத தொகையாக வசூல் செய்யப்பட்டுள்ளது எனவும், மேலும், மேற்படி நிறுவனத்தினர் ஏற்கனவே வரியாக ரூ.61,110/– செலுத்தி வந்த நிலையில் தற்போது கூடுதலாக விதிக்கப்பட்ட தொகை உடன் ரூ.22,347/– ஆக கூடுதல் ரூ.83,457/– வரி விதிக்கப்பட்டு வரியினை 2024–2025 வரை, 13.03.2025 அன்று வசூல் செய்யப்பட்டுள்ளது எனவும், கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டல உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மேலும், எதிர்மனுதாரரான திரு. V.ரங்கசாமி என்பவர் தன்னுடைய கட்டிடத்தின் எல்லா பக்கங்களிலும் போதிய கார் பார்க்கிங் வசதி உள்ளது என்றும், நான்கு பக்கங்களிலும் இடைவெளி விடப்பட்டுள்ளது என்றும், வணிக வளாக கட்டிடத்தின் விதிமுறைப்படி முந்தைய ஆண்டில் சொத்து வரி ரூ.1,34,220/–ம், நடப்பு ஆண்டில் திருத்திய சொத்து வரியாக ரூ.2,21,756/–ம் செலுத்தி வருவதாகவும், கட்டிடம் முழுமையாக அனுமதி பெறப்பட்டு, அதன்படி வணிக பயன்பாட்டிற்கான வரி கட்டப்பட்டுள்ளது என்ற விவரம் அவரது வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ளதற்கு மாறாக எதிர்மனுதாரரான திரு.V.ரங்கசாமி என்பவர் தன்னுடைய கட்டிடத்தின் நான்கு பக்கத்திலும் இடைவெளி விட்டுள்ளதாகவும், அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும், வணிக வளாகத்திற்கான சொத்து வரி அரசுக்கு குறையாமல் செலுத்தி வருவதாக தெரிவித்துள்ள நிலையில், கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டல உதவி ஆணையர் தன்னுடைய அறிக்கையிலும், வாக்குமூலத்திலும் கூடுதலாக கட்டப்பட்ட கட்டிடத்திற்கு அபராத தொகையுடன் வசூலிக்கப்பட்டது என்று தெரிவித்திருந்தாலும், கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட M.T.P.Road-ல் உள்ள 9/2B5 கட்டிடம் அரசு விதிமுறைகளுக்குட்பட்டு, வரைபட அனுமதியின்படி கட்டப்பட்டுள்ளதா என்றும், Community

hall அனுமதியின்றி இயங்கி வருகிறதா என்பது குறித்தும், கண்டறியும் பொருட்டு, மேற்கண்ட கட்டிடத்தினை கோயம்புத்தூர் ஆணையர் முழுமையாக கள ஆய்வு செய்து உரிய சட்ட பூர்வ நடவடிக்கை எடுக்குமாறு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திருவாளர்கள் S. திருமூர்த்தி மற்றும் V. சரவணகுமார்,
6/46 பெரிய வடவள்ளி, சின்ன வடவள்ளி (PO),
சின்ன வடவள்ளி, பொகலூர் வழி,
கோயம்புத்தூர் மாவட்டம்–641 697.

2) ஆணையர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர்.

3) உதவி ஆணையாளர்,
வடக்கு மண்டலம்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்–641 697.

4) திரு. V.ரங்கசாமி,
9/2B5, M.T.P. ரோடு,
துடியலூர், கோயம்புத்தூர்.

5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

6) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்பபடி /அனுப்பப்படுகிறது //

23/6/25
செயலாளர் .

20/6/25